வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 14.10.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மங்கோலிய அதிபர் திரு குரேல்சுக் உக்னா-வுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் கூகுள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மையம் அமைய உள்ளது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

சர்வதேச கட்டமைப்புகளில் காலத்திற்கு ஒவ்வாத அம்சங்களை சீரமைத்தல் அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

பட்டேல் பிறந்த நாளை ஒட்டி மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள ஒற்றுமைப் பேரணிகளில், இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டுமென புதுச்சேரி உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் கேட்டுக் கொண்டுள்ளார்

மோடி-மங்கோலியா

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மங்கோலிய அதிபர் திரு குரேல்சுக் உக்னா-வுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார். மனிதாபிமான உதவிகள், மங்கோலிய மரபுச் சின்னங்களின் புனரமைப்பு, கூட்டுறவுத் துறையின் ஊக்குவிப்பு, டிஜிட்டல் வசதிகள் மற்றும் இதர துறைகள் தொடர்பாக இருதலைவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர். இந்தியா-மங்கோலிய உறவுகளின் 70-ஆம் ஆண்டைக் குறிக்கும் வகையில் நினைவுத் தபால் தலைகளையும் இருதலைவர்களும் இணைந்து வெளியிட்டனர். பின்னர் திரு நரேந்திர மோடி கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் மங்கோலிய குடிமக்களுக்கு, இலவச இ-விசா வழங்க இந்தியா முடிவு செய்திருப்பதாக தெரிவித்தார். மங்கோலியாவைச் சேர்ந்த இளம் கலாச்சார தூதர்கள் ஆண்டுதோறும் இந்தியா வந்து செல்லத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மங்கோலியாவில் இந்திய கடன் உதவியுடன் அமைக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தினால் மங்கோலியாவின் எரிசக்தி பாதுகாப்பு வலுப்பெறும் என்றும் அவர் கூறினார். இந்தியாவின் நாலந்தா பல்கலைக் கழகம் மங்கோலியாவில் பவுத்த மதம் பரவியதில் முக்கிய பங்காற்றி இருப்பதை பிரதமர் சுட்டிக் காட்டினார். இத்தகைய வரலாற்று பூர்வ உறவுகளுக்கு புத்துயிர் பாய்ச்ச இருநாடுகளும் முடிவு செய்திருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவின் உதவிகளுக்கு மங்கோலிய அதிபர் நன்றி தெரிவித்துக் கொண்டார். 4 நாள் பயணமாக நேற்று இந்தியா வந்து சேர்ந்த அவர் இன்று மாலை குடியரசு தலைவர் மாளிகையில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்திக்கிறார்.

மோடி கூகுள்

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டிணத்தில் கூகுள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மையம் அமைய உள்ளது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். இம்மையத்தினால் அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் மக்களுக்கு கிடைக்கவும் டிஜிட்டல் பொருளாதாரம் வலுப்பெறவும் உலக அளவிலான தொழில் நுட்பத் துறையில் முன்னணி நாடாக இந்தியா மேம்படவும் ஏதுவாகும் என்று, கூகுள் தலைமை செயல்

அதிகாரி திரு சுந்தர் பிச்சை, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் கூறி உள்ளார். கிகாவாட் அளவில் திறன் கொண்ட ஏஐ மையம் ஒன்றை அமைப்பதில் கூகுள் நிறுவனத்தின் முதலீடுகள், முன்னேறிய இந்தியா என்னும் இலக்கிற்கு ஏற்றதாக அமையும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து கூடுதல் தகவல்கள்……………….

(வாய்ஸ்)

மோடி கூகுள்(வாய்ஸ்)

கூகுள் நிறுவனம், அதன் மிகப் பெரிய செயற்கை நுண்ணறிவு கேந்திரத்தை, ஆந்திர மாநிலம் விசாகப் பட்டிணத்தில் அமைக்க, அடுத்த 5 ஆண்டுகளில் 15 பில்லியன் டாலர் முதலீடு செய்யப்படும் என, புதுடெல்லியில் நடைபெறும் பாரத் ஏஐ சக்தி விழாவில் இன்று அறிவித்தது. இந்தியாவின் டிஜிட்டல் எதிர்காலத்திலும், உள்நாட்டு அளவிலான, ஒருங்கிணைந்த டேட்டா கட்டமைப்பிலும் கூகுள் நிறுவனத்திற்குள்ள உறுதிப்பாட்டின் சின்னமாக இம்முதலீடு திகழும் என்று கூகுள் கிளவ்ட் தலைமை செயல் அதிகாரி திரு தாமஸ் குரியன் கூறினார். இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு இயக்கத்திற்கு, இம்மையத்தினால் பலவகையில் நன்மை ஏற்படும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். முன்னேறிய இந்தியா என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, உலக அளவிலான தொழில் நுட்பத் துறையில் இந்தியாவின் பங்கு மேலும் மேலும் அதிகரித்து வருவதாக ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறினார். கூகுள் நிறுவனத்தின் விசாகப்பட்டிணம் ஏஐ மையத்தினால், பெரும் எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்பதும், இந்திய இளைஞர்களின் தொழில் நுட்பத் திறன் மேலும் வலுப்பெறும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அமித் ஷா

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தீவிரவாத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்ற கொள்கையுடன்,

தீவிரவாத அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று அரியானா மாநிலம் மானேசரில், தேசிய பாதுகாப்புக் குழுவின் 41-ஆவது உதய நாள் விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மும்பை, சென்னை, கொல்கத்தா, ஐதராபாத், அகமதாபாத் ஆகிய 6 இடங்களில் தேசிய பாதுகாப்புக் குழுவின் மையங்கள் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளதாகவும் உத்தரபிரதேஷ் மாநிலம் அயோத்தியில் இத்தகைய மேலும் ஒரு மையம் விரைவில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். விழாவின் போது தீவிரவாத எதிர்ப்பில் உயர்நிலைப் பயிற்சிகளை வழங்குவதற்கான சிறப்பு மையம் ஒன்றை அமைக்கும் பணிகளுக்கும் உள்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

*ஜல் சக்தி*

மத்திய ஜல்சக்தி அமைச்சகம், வெகுஜன தொடர்பியல் பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கான, இன்டர்ன்ஷிப் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, 6 முதல் 9 மாதங்கள் வரை, மாதம் 15 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்படும். விருப்பமுள்ள மாணவர்கள், mowr.nic.in என்ற இணையதளம் மூலமாக, அடுத்த மாதம் 24-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*ராணுவம் மாநாடு*

ஐ நா அமைதி காக்கும் படைக்கு துருப்புகளை வழங்கும் நாடுகளுக்கு இடையிலான 3 நாள் மாநாடு புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. சர்வதேச விதிமுறைகளை சில நாடுகள் வெளிப்படையாகவே மீறும் நிலையில் வேறு சில நாடுகள் ஆதிக்க மனப்பான்மையுடன் செயல்படுவதால், பன்னாட்டுக் கட்டமைப்புகளில் காலத்திற்கு ஒவ்வாத அம்சங்களை சீரமைத்தல் அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இம்மாநாட்டில் பேசுகையில் கூறினார். அமைதி காக்கும் பணிகளிலும் துருப்புகளின் தயார் நிலையே வெற்றிக்கு அடிப்படை

என்பதால் துருப்புக்களை வழங்கும் நாடுகள் அதற்கேற்ப செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அமைதிகாக்கும் பணிகளை திறம்பட்ட முறையில் மேற்கொள்ளத் தேவையான, விலை மலிவான தொழில் நுட்பங்களை இந்தியா உருவாக்கி இருப்பதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார். குறிப்பாக அமைதி காக்கும் பணிகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரியது என்றும் பெண்களின் பங்கேற்பினால் உள்ளூர் மக்களிடையே, அமைதி காக்கும் பணிகளுக்கான ஆதரவு பெருகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தலைமை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி, இம்மாநாட்டில் பேசுகையில் ஐ நா மன்றம் இதுவரை மேற்கொண்டுள்ள 71 அமைதி காக்கும் நடவடிக்கைகளில், 51 நடவடிக்கைகளுக்கு, சுமார் 3 லட்சம் வீரர்-வீராங்கனைகளை இந்தியா வழங்கி இருப்பதாக தெரிவித்தார்.

பிரேசில், இத்தாலி, ஆஸ்திரேலியா, மலேசியா, பிரான்ஸ், போலந்து உள்ளிட்ட 32 நாடுகளில் இருந்து ராணுவத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

*ஜிஎஸ்டி- ஜம்மு-காஷ்மீர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் ஜம்மு-காஷ்மீரில் தொழில் உள்ளிட்ட துறைகள் எப்படி எல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு **செய்தித் தொகுப்பு……..**

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி- ஜம்மு-காஷ்மீர்*

(வாய்ஷ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் ஜம்மு-காஷ்மீரைப் பொறுத்த வரை பாரம்பரிய தொழில்கள் மற்றும் உள்ளூர் பொருளாதாரத்திற்கு, பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளன. புவிசார் குறியீடு பெற்ற ஜம்மு-காஷ்மீரின் புகழ்பெற்ற பஷ்மினா சால்வைகள், காகிதக் கூழ் மொம்மைகள், பசோலி ஓவியங்கள் மற்றும் வால்நட் மர வேலைப்பாடுகள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் இத்தகைய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைக் கலைஞர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். ஜம்மு-காஷ்மீர் கைவினை பொருட்களுக்கு உள்ளூர் அளவிலும் வெளிநாட்டு சந்தையிலும் விற்பனை வாய்ப்புகள் அதிகரித்து உள்ளன. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையுள்ள ஓட்டல் ரூம் வாடகை மீது ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் ஜம்மு-காஷ்மீருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து சுற்றுலாத் துறை வளர்ச்சி அடையவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பொதுவாக புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் ஜம்மு-காஷ்மீரில், கிராமப் புறங்கள் மற்றும் நகர்புறங்கள் உட்பட அனைத்து பகுதிகளிலும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஊக்கம் பெறுவதில் ஐயமில்லை.

*பட்டேல்-நமச்சிவாயம்*

சர்தார் பட்டேலின் 150-ஆவது பிறந்த நாளை ஒட்டி, போதையில்லா இந்தியாவை உருவாக்கும் வகையிலும் நாட்டின் கலாச்சாரப் பண்பாட்டை இளைஞர்களிடையே வலியுறுத்தும் வகையிலும் வரும் 31-ஆம் தேதி முதல் நவம்பர் 25-ஆம் தேதி வரை மத்திய அரசு நாடு முழுவதும் ஒற்றுமை பேரணிகளை நடத்த உள்ளது. இத்தகைய ஒவ்வொரு பேரணியும் 8 முதல் 10 கிலோமீட்டர் தொலைவிற்கு நடைபெறும் என புதுச்சேரியில் மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தேசப்பற்றை வலியுறுத்தும் வகையிலும் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுக்கும் விதத்திலும் இப்பேரணிகள் அமையும் என்றும் மத்திய அரசின் மை-பாரத் இணையதளம் மூலம் பதிவு பெற்று, இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பெரும் எண்ணிக்கையில் இப்பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்

கொள்ளப்படுவதாகவும் திரு நமச்சிவாயம் கூறினார். இதை ஒட்டி பள்ளிக் கல்லூரிகளில் விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்றும் 2-ஆம் கட்டமாக நவம்பர் 26-ஆம் தேதி அரசியல் சாசன தினத்தன்று குஜராத் மாநிலம் ஒற்றுமை சிலை அருகே மாபெரும் பேரணி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

*வானிலை*

இன்று கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 20-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டம் செம்மேட்டில் 11 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 3 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*கிரிக்கெட்-டெஸ்ட்*

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே டெல்லியில் நடைபெற்ற 2-ஆவது மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2-க்கு பூஜ்யம் என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி உள்ளது. 2-ஆவது டெஸ்ட் போட்டியின் 5-ஆம் நாளான இன்று, 121 ரன் என்னும் வெற்றி இலக்குடன் 2-ஆவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இந்திய அணி, 3 விக்கெட் இழப்பிற்கு 124 ரன் எடுத்து வெற்றி பெற்றது. இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்- 518 ரன் டிக்ளர். வெஸ்ட் இன்டிஸ்- முதல் இன்னிங்ஸ் 248 ரன், 2-ஆவது இன்னிங்ஸ் 390 ரன்.

*மகளிர் கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இலங்கை-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே, இன்று கொழும்புவில் நடைபெறும் போட்டியில் டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் இலங்கை அணி, சற்று முன் வரை, --------- ஓவர்களில், -------- விக்கெட் இழப்பிற்கு, ------ ரன் எடுத்திருந்தது.

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், மங்கோலிய அதிபர் திரு குரேல்சுக் உக்னா-வுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் **கூகுள்** நிறுவனத்தின் **செயற்கை நுண்ணறிவு மையம்** அமைய உள்ளது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

**சர்வதேச** கட்டமைப்புகளில் காலத்திற்கு ஒவ்வாத அம்சங்களை சீரமைத்தல் அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

பட்டேல் பிறந்த நாளை ஒட்டி மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள **ஒற்றுமைப் பேரணிகளில்**, இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டுமென புதுச்சேரி உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் கேட்டுக் கொண்டுள்ளார்

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------